ஸ்ரீ அன்னபூர்ணா
ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்ரிங்

# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

SREE Annapoorna
SREE Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

Vol No. : 10 Issue No. : 26 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL ஞாயிறு, செப் 24-30, 2023, 8 பக்கங்கள், ரூ.5/- ஆண்டு சந்தா - ரூ.260/-



**Dr. அனுஷா ரவி,**
**தலைமை நிர்வாக அதிகாரி,**
**பார்க் கல்வி குழுமம்**

# பார்க் கல்வி குழுமங்களின் பொன்விழா விருதுகள்!





கவிஞர் புவியரசு சார்பாக அவரின் மகளுக்கு மற்றும் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரைக்கும் பார்க் குழுமங்களின் பொன் விழாவில் துரோணா விருதினை பார்க் கல்விக் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி அனுஷா ரவி மற்றும் கமலஹாசன் இணைந்து வழங்குகின்றனர்.

## இரும்புப் பெண்மணி விதைத்த விதை

ஐம்பது ஆண்டுகள் கடந்து கல்விப் பணியில் தனக்கென ஓர் மையில்கல்லை எட்டியிருக்கும் பார்க் கல்வி குழுமங்களின் பொன்விழா விருதுகள் நிகழ்ச்சி கோவை கணியூரில் உள்ள பார்க் கல்லூரி வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பார்க் கல்வி குழுமங்களின் நிறுவனர் பிரேமா ரவி அவர்களின் நினைவுகளுடன் தொடங்கிய இந்நிகழ்ச்சியில் பார்க் கல்விக் குழுமத்தின் நிறுவனரும் தாளாளருமான டாக்டர் ரவி, தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் அனுஷா ரவி மற்றும் செயலாளர் டி.ஆர் கார்த்திக் ஆகியோர் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியின் வரவேற்புரையில் அனுஷா ரவி பேசியதாவது:

"ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இரும்புப் பெண்மணி விதைத்த விதையை இன்று பார்க் குழுமத்தின் பொன்விழா நிகழ்ச்சியாக கொண்டாடுகிறோம். இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பிரபல கிரிக்கெட் வீரர் கபில் தேவ் முன்னிலையில் வெள்ளி விழா கொண்டாடப்பட்டது.

அவ்வகையில் பொன் விழாவிற்கு நடிகர், இயக்குநர், பாடகர், ஆசிரியர், கவிஞர், பத்திரிகையாளர், உத்வேகமான தலைவர் என பன்முக ஆளுமை கொண்ட உலக நாயகன் கமல்ஹாசன் இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டுள்ளார்.

மேலும், இவ்விடத்தில் எனது பெற்றோர்களான ரவி மற்றும் பிரேமா ரவி அவர்களை பற்றி பேச கடமைப்பட்டிருக்கிறேன். என் அம்மா திருமதி. பிரேமா வலிமை மிக்க பெண். என் அப்பா மிகவும் சாதரணமாக வளர்ந்த ஒரு சிறந்த ஆசிரியர். இத்தகையக அற்புதமான பெற்றோர்களுக்கு இத்தருணத்தில் நான் நன்றி தெரிவித்து கொள்கிறேன் என்றவர்.,

பார்க் பொன் விழா துரோணா விருதை பெறவிருக்கும், இந்தியாவின் நிலவு மனிதன் என்று அழைக்கப்படும் டாக்டர்.மயில்சாமி அண்ணாதுரை மற்றும் சாகித்ய அகாடமி விருது பெற்ற கவிஞர் புவியரசு ஆகியோரை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். பார்க் குழுவின் நிறுவனர்கள், பேராசிரியர்கள்,ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள், மாணவர்கள் என அனைவரையும் மகிழ்வுடன் வரவேற்றார்.

## இது ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு

**- கமல்ஹாசன்**



பார்க் கல்விக் குழுமத்தின் தலைவர் டாக்டர் ரவி, தலைமை நிர்வாக செயலாளர் அனுஷா ரவி மற்றும் செயலாளர் கார்த்திக், மாணவர்கள், ஊழியர்கள் என அனைவர்க்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு பேசிய கமல்ஹாசன்.,"

மக்கள் நீதி மையத்தின் மாநிலச் செயலாளர்களுள் ஒருவரான அனுஷா ரவியை, பார்க் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகத் தான் உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அரசியலில் மாற்றம் வேண்டும் என்று என்னுடன் துணை நிற்கும் இரும்பு பெண்மணியாக நான் அறிவேன்.

இந்நிகழ்விற்கு நான் கலந்து கொள்வதற்கான முதன்மை காரணம், இது ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு என்பதால் தான். முறையான கல்வி பெறாத நான் உங்கள் மனதில் இடம் பிடிக்க உதவிய என்னோடுடைய முதல் ஆசிரியரான பெற்றோர், நடன ஆசிரியர்கள், இயக்குநர்கள், எழுத்தாளர்கள், தலைவர்கள் என ஏராளமான ஆசிரியர்களால் என் வாழ்க்கை உருவானது என்று கூறியதோடு,

துரோணா விருது பெரும் கவிஞர் புவியரசு மற்றும் சாதனை தமிழன் மயில்சாமி அண்ணாதுரை ஆகியோருக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். மேலும், பார்க் குழுமத்தின் பொன்விழா விருது பெரும் சாதனை படைத்த முன்னாள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் தனது வாழ்த்துகளை பகிர்ந்து கொண்டார்.

## கல்விப் பணியில் ஏற்படுத்திய புரட்சி

**- டாக்டர் ரவி, நிறுவனர், பார்க் கல்விக் குழுமம்**



தமிழ்நாடு அரசு மற்றும் அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சிலால் தமிழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட முதல் சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரியாக அரசாணை பெற்று கல்விப் பணியில் புரட்சி ஏற்படுத்தியது பார்க் கல்விக் குழுமம் என்று சிறப்புரையாற்றினார் அக்குழுமத்தின் நிறுவனர் டாக்டர் ரவி.

நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

1960ல் திரைத்துறைக்குள் நுழைத்து தனக்கென ஓர் முத்திரை படைத்து, 63 ஆண்டுகள் கடந்து இருக்கக் கூடிய உலகநாயகன் பத்மஸ்ரீ டாக்டர் கமல்ஹாசன் இங்கே வருகை தந்திருப்பது பொருத்தமாக இருக்கிறது. ஏனெனில், கல்வித் துறையில் 53 ஆண்டுகள் கடந்த பார்க் குழுமத்தை அவர் வாழ்த்துவது சிறப்பு. எங்களுடைய கல்வி பயணத்திற்கும் அவருடைய கலை பயணத்துக்கும் சிலபல ஒற்றுமைகள் உள்ளன.

இந்த ஐம்பது ஆண்டுகாலம் பார்க் குழுமம் எவ்வாறு வளர்ந்திருக்கிறது என்று பார்த்தால், கல்வித் துறையில் மட்டும் தனது பங்களிப்பை நிறுத்தாமல், பொதுத்துறையில் இருக்கக்கூடிய அத்துணை மக்களையும் அழைத்து பாராட்டியதும், அவர்களின் வாழ்த்துக்களை பெற்றதினால் இங்கு விருட்சமாக வளர்ந்து இருக்கிறோம் என்பதும் நிதர்சனமான உண்மை.


1970 ஜுன் மூன்றாம் தேதியில், அன்றைய திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் துரைசாமி, நர்சரி பள்ளியை துவங்கி வைத்தார். இன்று திருப்பூரில் எத்தனையோ பள்ளிகள் இருந்தாலும் கூட அவர்களுடன் சேர்ந்து எங்கள் பள்ளியும் பயணிக்கிறது என்பதில் பெருமையாக உள்ளது. அதை தொடர்ந்து, பிரேமா உயர்நிலை பள்ளி, என எங்கள் கல்விப் பயணம் பள்ளியளவில் நின்றுவிடாமல் அடுத்தது உயர்கல்விக்கு செல்ல வேண்டும் என்று பார்க் தொழில்நுட்பக் கல்லூரி, பார்க் கட்டக்கலை கல்லூரி, பார்க் ஸ்கூல் ஆப் ரெசிடென்சியல், பார்க் குளோபல் ஸ்கூல் ஆப் பிசினஸ் (சென்னை மற்றும் கோவை), பார்க் குளோபல் ஸ்கூல் உட்பட 14 நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.


பார்க் குழுமத்தின் வெள்ளி விழாவின் போது, இந்திய கிரிக்கெட் வரலாற்றில் தடம் பதித்த மிகச் சிறந்த வீரனான கபில்தேவ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மேலும், பி.டி சுஷா, குற்றாலீஸ்வரன், முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் உள்ளிட்ட பலர் வருகை தந்துள்ளனர்.

மேலும், எம்.எல்.ஏக்கள், எம்.பிக்கள் அவர்களின் உறுதுணையை எங்களுக்கு அளித்ததை இந்த தருணத்தில் குறிப்பிடாமல் இருந்தால் அது குற்றமாகிவிடும். அதோடு, பார்க் கல்விக் குழுமத்தின் ஒவ்வொரு படியிலும்பிரேமா அவர்களின் தடம் பதிந்திருக்கும்.

திருப்பூரில் மக்களிடம் கல்வி என்று சொன்னால் பிரேமா என்ற பெயரை தக்க வைத்துக் கொண்டார். அவர்களை இந்த தருணத்தில் நெஞ்சார நினைப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம் என்றவர்.,

'வானை அளப்போம், கடல் மீனை அளப்போம், சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்' என்று கூறிய பாரதியின் கனவை நினைவாக்கியவர் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை. பார்க் கல்விக் குழுமத்திற்கு அவர் புதிய வரவு இல்லை என்றாலும் அவரது பல்வேறு அலுவல்களுக்கிடையில் சந்திர மண்டலத்தை கவனித்து இருந்தாலும் கூட இந்த கொங்கு மண்டலத்திற்கும் வருகை தந்து வாழ்த்த வந்திருக்கிறார் அவரை வரவேற்கிறேன் என்றார்.















இந்நிகழ்ச்சியில் "பார்க் பொன் விழா துரோணா விருது 2023" விருதுகள், முன்னாள் இஸ்ரோ விஞ்ஞானியும் "தி மூன் மேன் ஆப் இந்தியா" என்று அழைக்கப்படும் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை மற்றும் "கையொப்பம்" நாவலுக்கு சாகித்திய அகாடமி விருது பெற்ற கவிஞர் மற்றும் எழுத்தாளர் புவியரசு ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

மேலும் பார்க் கல்வி குழுமங்களின் முன்னாள் மாணவர்களான சந்திராயன் மூன்று திட்ட அலுவலர்களான ரமேஷ் சுப்பிரமணியன் மற்றும் ஹரிஹரன் ஆகியோருக்கு பார்க் பொன் விழா முன்னாள் மாணவர்களுக்கான சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும் விழாவில் முன்னாள் மாணவர்கள் பிக் பாஸ் சீசன் 6 புகழ் நடிகை ஷிவின் கணேசன், திரைப்பட தயாரிப்பாளர் கே விஜய் பாண்டி, ஆப்ஷன்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட் நிறுவனரும் நிர்வாக இயக்குனருமான சுஜித், யோகா போட்டியில் தேசிய அளவில் தங்கம் வென்ற யோகா டிரெயினர் வைஷ்ணவி உள்ளிட்டவர்களுக்கு பார்க் பொன் விழா சிறப்பு முன்னாள் மாணவர்களுக்கான விருது வழங்கி கெரவிக்கப்பட்டது.

மேலும், கோவை மாநகரில் செயல்பட்டும் 300க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளிகளை சேர்ந்த 300 சிறந்த ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

# வெற்றி பெறுமா அண்ணாமலையின் ஆடுபுலி ஆட்டம்!



✍ **சாணக்கியன்,** தி கோவை மெயில்

அதிமுகவுக்கு எதிராக தமிழக பாஜக தலைவர் கே.அண்மாமலை ஆடி வரும் ஆடுபுலி ஆட்டம் வெற்றி பெறுமா என்ற விவாதம் அரசியல் அரங்கில் எழுந்துள்ளது.

2004 மக்களவைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குப்பிறகு இனிமேல் எனது வாழ்நாள் முழுவதும் பாஜகவுடன் கூட்டணி கிடையாது என அதிரடியாக அறிவித்தார். 2009 மக்களவைத் தேர்தலில் குறிப்பிடத்தகுந்த வெற்றி, 2011 இல் தேமுதிகவுடன் இணைந்து இமாலய வெற்றி, 2014 மக்களவைத் தேர்தல், 2016 பேரவைத் தேர்தலில் தனித்தே இமாலய வெற்றி என அரசியல் புரட்சியை ஏற்படுத்தினார் ஜெயலலிதா.

ஜெயலலிதா மறைவுக்குப்பின் 2019 மக்களவைத் தேர்தலில் பாஜகவுடன் மீண்டும் கூட்டணி சேர்ந்தது அதிமுக. ஆனால், விளைவு மீண்டும் படுதோல்வி. 2021 பேரவைத் தேர்தலில் 40 சதவீத வாக்கு வங்கியை நெருங்கினாலும் அதிமுகவால் ஆட்சியை தக்கவைக்க முடியவில்லை.

பாஜக இருப்பதால் தான் அதிமுக தோல்வி அடைந்து வருவதாக அதிமுக தலைவர்கள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வந்த நிலையில், தமிழக பாஜக தலைவராக அண்ணாமலை நியமிக்கப்பட்டார். அவர் பதவியேற்ற நாள் முதலே அதிமுக-பாஜக இடையிலான உறவு ஏழாம் பொருத்தமாகவே இருந்து வருகிறது.

நகர்புற உள்ளாட்சித் தேர்தலில் பாஜகவுக்கு எடப்பாடி பழனிசாமி கண்ணாமூச்சி காட்டி கூட்டணியில் இருந்து கடைசி நேரத்தில் கழற்றிவிட்டபோது துணிந்து பாஜகவை தனித்து களம் இறக்கிய அண்ணாமலை பாஜகவை 5 சதவீத வாக்கு வங்கி பெற வைத்து அரசியல் அரங்கில் அதிரடி திருப்பத்தை ஏற்படுத்தினார். திமுக, அதிமுகவுக்கு அடுத்தப்படியாக மூன்றாவது வாக்கு வங்கி கட்சியாக பாஜகவை நிலைநிறுத்தினார் அண்ணாமலை.

தங்களுக்கு மிகவும் சாதகமான கொங்கு மண்டலத்தில் ஈரோடு கிழக்கு தொகுதியில் அதிமுக 67,000 வாக்கு வித்தியாசத்தில் காங்கிரஸின் கை சின்னத்துடன் மோதி தோல்வி அடைந்தபோது தான் விழித்துக்கொண்டார் அண்ணாமலை.

எம்ஜிஆர், ஜெயலலிதா காலத்தில் இருந்ததை போன்ற அதிமுக இது அல்ல. இது ஒரு குறிப்பிட்ட மண்டலத்துக்கான கட்சியாக சுருங்கிவிட்டது. குறிப்பாக கொங்கு, வடதமிழக கட்சியாக அதிமுக சுருங்கிவிட்டது என்பதை உணர்ந்துகொண்ட அண்ணாமலை, பாஜகவை மையப்படுத்தி தானும் பெரிய தலைவராக எடப்பாடியுடன் போட்டியிட்டு வளர வேண்டும் என்ற எண்ணத்துக்கு வந்தார்.

பாஜக தான் பிரதான எதிர்கட்சி என அண்ணாமலை பேசியதில் இருந்து தொடங்கிய உரசல், ஜெயலலிதாவை விமர்சனம் செய்தபோது அவருக்கு எதிராக அதிமுக மாவட்டச் செயலர்கள் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றும் அளவுக்கு நிலைமை மாறியது.

தொடர்ந்து அண்ணாமலை கொடுத்த விளக்கம், தில்லியில் நடந்த சமரசப் பேச்சு ஆகியவற்றால் அண்ணாமலை அதிமுக இடையிலான உரசலுக்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டிருந்த நிலையில், இப்போது அண்ணா, பெரியார் குறித்து அண்ணாமலை பேசியதாக மீண்டும் அதிமுக தலைவர்கள் இப்போது மீண்டும் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

அதிமுக கூட்டணியில் பாஜக இல்லை, கட்சியின் முடிவை தான் அறிவிக்கிறேன் என அதிமுக அமைப்புச் செயலர் டி.ஜெயக்குமார் வெளியிட்டுள்ள அறிவிப்பு அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அதிமுக தலைவர்களின் கோபத்துக்கு அண்ணாமலையின் பேச்சுதான் காரணமா அல்லது தில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி கே.பழனிசாமி ஆகியோர் இடையிலான சந்திப்பின்போது பாஜக விதித்த நிபந்தனைகள் தான் காரணமா என்பது விவாதப் பொருளாக மாறியுள்ளது.

மத்திய அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து விட்டு எடப்பாடி பழனிசாமி திரும்பிய ஓரிரு தினங்களில் அதிமுக பாஜக இடையே மீண்டும் உரசல் ஏற்பட்டுள்ளது. பாஜகவை பொருத்தவரை இந்த முறை தமிழகத்தில் இரட்டை இலக்க எண்ணிக்கையிலான தொகுதிகளில் போட்டியிட நிபந்தனை விதிக்கப்பட்டது அதிமுகவுக்கு நெருக்கடியை கொடுத்துள்ளது.

மேலும், கொங்கு மண்டலத்தில் கோவை, நீலகிரி, ஈரோடு, தென் மாவட்டங்களில் கன்னியாக்குமரி, திருநெல்வேலி, தென்காசி, விருதுநகர் ராமநாதபுரம், சிவகங்கை, சென்னை மண்டலத்தில் தென்சென்னை, வடதமிழகத்தில் வேலூர் உள்ளிட்ட முக்கிய தொகுதிகளை குறிவைத்து பாஜக காய்நகர்த்தி வருவது அதிமுகவுக்கு அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிபந்தனைகளை ஏற்றால் தங்களது கட்சிக்கு எதிர்காலத்தில் ஆபத்து ஏற்படக்கூடும், எனவே, பாஜகவுக்கு ஒற்றை எண்ணிக்கையில் தான் தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என்பது அதிமுக 2ஆம் கட்டத் தலைவர்களின் எண்ணம். கடந்த முறை பாஜகவுக்கு 5 தொகுதிகள் மட்டுமே ஒதுக்கப்பட்ட நிலையில் இம்முறை இரட்டை இலக்க தொகுதிகளை ஒதுக்கினால் பாஜக வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை அதிமுக நேரடியாக ஒப்புக்கொண்டது போல ஆகிவிடும், அதேபோல, இரட்டை இலக்க தொகுதிகளில் போட்டியிடும்போது பாஜக குறைந்தபட்சம் 8 சதவீத வாக்குகளை பெறக்கூடிய வாய்ப்பும் உருவாகும்.

ஏற்கனவே, 2026 இல் பாஜக தலைமையில் தனி அணி உருவாகும் என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தொடர்ந்து பேசி வரும் நிலையில், 2024 மக்களவைத் தேர்தலில் பாஜகவின் வாக்கு வங்கியை மட்டுப்படுத்துவது தான் புத்திசாலித்தனமான முடிவாக இருக்கும், எனவே, இரட்டை இலக்கத் தொகுதிகளை பாஜகவுக்கு ஒதுக்கக்கூடாது என அதிமுக இரண்டாம் கட்டத் தலைவர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

ஆனால், பாஜக தேசியத் தலைமைக்கு அண்ணாமலை கொடுத்துள்ள ஆய்வு அறிக்கையில், 2016, 2021 பேரவைத் தேர்தல்கள், 2019 மக்களவைத் தேர்தல் போல அதிமுக பலமான கட்சியாக இல்லை. அதன் வாக்கு வங்கி தென்மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், சென்னை மண்டலம் ஆகியவற்றில் குறைந்துள்ளது. அதேநேரத்தில் மக்களவைத் தேர்தல் என்பதால் பிரதமர் வேட்பாளரை மையமாக வைத்து தான் மக்கள் வாக்களித்து வருகின்றனர்.

தமிழகத்தில் திமுக-காங்கிரஸ் கூட்டணி ராகுல் காந்தியை முன்னிறுத்தும்போது, அதிமுக மோடியை முன்னிறுத்தினால் தான் வாக்குகளை பெற முடியும், தனித்துச் சென்றால் ஜெயலலிதா போல வாக்கு பெறுவது கடினம், எனவே, அதற்குரிய விலையாக இரட்டை இலக்கத் தொகுதிகளை பாஜகவுக்கு கேட்டுப்பெற வேண்டும் என்பது தான் அண்ணாமலையின் யோசனை.

தில்லியில் அமித்ஷா எடப்பாடி பழனிசாமி சந்திப்பின்போது இரட்டை இலக்கத் தொகுதிகள் கேட்டு நிபந்தனை விதிக்கப்பட்டதால்தான் தமிழகத்தில் பாஜக-அதிமுக இடையே வார்த்தை போர் எழுந்துள்ளதாகவும், ஜெயலலிதா, அண்ணா, பெரியார் உள்ளிட்டோரை அண்ணாமலை கொச்சைப்படுத்தி பேசிவருவதாக அதிமுக எழுப்புவது வெற்றுக்காரணங்கள் தான் என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.

என்டிஏ கூட்டணியில் 62 எம்.எல்.ஏ.க்களவை வைத்திருக்கும் பெரிய கூட்டணி கட்சி அதிமுக தான். இந்தியா கூட்டணிக்கு எதிராக என்டிஏ கூட்டணியும் வலுவாக இருக்கிறது என்ற பிம்பத்தை உருவாக்க அதிமுகவை கூட்டணிக்குள் தக்கவைப்பது மிகவும் அவசியம். அதேநேரத்தில், பிரதமரை மையமாக வைத்து நடக்கும் தேர்தல் என்பதால் 2024 இல் பாஜகவுடன் கூட்டணியில் இருப்பது காலத்தின் கட்டாயம். தனித்து நின்று வாக்கு வங்கி குறைந்துவிட்டால் 2026 பேரவைத் தேர்தலில் திமுகவுக்கு எதிராக பலமான கூட்டணியை அதிமுகவால் கட்டமைப்பதில் மிகப்பெரிய சிரமம் உருவாகும்.

அதிமுக கூட்டணியில் பாஜக இல்லை என முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அறிவித்த இரண்டு தினங்களில் தென்மாவட்டங்களைச் சேர்ந்த முன்னாள் அதிமுக அமைச்சர்கள் உதயகுமார், செல்லூர் ராஜு ஆகியோர் அதிமுகவின் பிரதமர் வேட்பாளர் மோடி தான் என அறிவித்தது பாஜக கூட்டணிக்காக அதிமுக கெஞ்சுகிறதா என நடுநிலையாளர்கள் யோசிக்கும் நிலையை உருவாக்கியது.

இதற்கிடையே செல்லூர் ராஜு ஒருபடி மேலே சென்று 2024 இல் பிரதமர் வேட்பாளர் மோடி என்பதை அதிமுக ஒப்புக்கொள்கிறது, ஆனால், 2026இல் எடப்பாடி தான் முதல்வர் வேட்பாளர் என்பதை பாஜக உறுதிப்படுத்த வேண்டும் என பேட்டி அளித்தார். ஆனால், மோடியை பிரதமர் வேட்பாளராக ஒப்புக்கொள்கிறவர்கள் மட்டுமே பாஜக கூட்டணியில் இருக்க முடியும், 2026இல் எடப்பாடியை முதல்வர் வேட்பாளராக ஒப்புக்கொள்ள முடியாது என அளித்த அதிரடி பதில் அதிமுக அனுதாபிகள் மட்டுமல்ல, தொண்டர்களையே அதிர்ச்சியில் உறையவைத்துள்ளது. அதிமுகவின் தன்மானம் மீது அண்ணாமலை தொடர் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி காட்டும் மௌனம் தொண்டர்களை அதிருப்தி அடைய செய்துள்ளது. ஜெயலலிதா பொதுச்செயலராக இருந்தால் ஏதாவது ஒரு பாஜக தலைவர் இதுபோல அதிமுகவை சீண்டிப் பார்க்க முடியுமா என அதிமுக தொண்டர்கள் புலம்பத் தொடங்கியுள்ளனர்.

இரட்டைத் தலைமை இருப்பதால்தான் அதிமுகவில் உறுதியான முடிவு எடுக்க முடியவில்லை என்ற இபிஎஸ் ஆதரவாளர்களின் கருத்து தவறு என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒற்றைத் தலைமையாக இருக்கும் இபிஎஸ், அண்ணாமலை அல்லது பாஜக மீது விமர்சனம் செய்யவோ அல்லது கூட்டணி இல்லை என உறுதியாக அறிவிக்கவோ ஏன் தயக்கம் காட்டுகிறார் என்பது புரியாத புதிராக உள்ளது.

அண்ணாமலை விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமி எடுக்கும் உறுதியான முடிவை பொறுத்து தான் அவரது எதிர்காலமும், அதிமுவின் எதிர்காலமும் நிர்ணயம் செய்யப்படும் என்கின்றனர் அரசியல் விமர்சர்கள். புலி பதுங்குவது பாய்வதற்காக தான், எடப்பாடி பழனிசாமி ராஜதந்திரி என்பதை கூடிய விரைவில் நிரூபிப்பார் என்கிறார்கள் அவரது ஆதரவாளர்கள்.

மக்களவைத் தேர்தல் பணிகள் தொடங்கியிருக்கும் நிலையில் பாஜக பேர வலியமையை அதிகரித்துள்ளது. கூட்டணி அமைப்பது, தொகுதிகள் ஒதுக்குவதில் ராஜதந்திரியான எடப்பாடி பழனிசாமிக்கு இது மிகப்பெரிய சவால் தான். பாஜகவுக்கு அதிமுக ஒதுக்கப்போகும் தொகுதிகள் ஒற்றை இலக்கமா அல்லது இரட்டை இலக்கமா என்பதை பொறுத்து தான் கூட்டணி பேச்சுவார்த்தையின் அடுத்தக்கட்டம் நகரக்கூடும்.

கூட்டணி பேரத்தில் வெற்றிப்பெறப் போவது அண்ணாமலையின் ஆடுபுலி ஆட்டமா, எடப்பாடி பழனிசாமியின் ராஜதந்திரமா என்பதற்கான விடை கூடிய விரைவில் கிடைத்துவிடும்.

## 2026-ஐ குறிவைக்கிறார் அண்ணாமலை

இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது, அண்ணாமலையை பொறுத்தவரை திமுகவுக்கு மாற்றாக தான் முதல்வர் வேட்பாளராக வர வேண்டும் எனும் எண்ணம் எழுந்துள்ளது, அதனால்தான் தனது போட்டியாளர் எனும் கருதும் எடப்பாடி பழனிச்சாமியை அரசியல் ரீதியாக தாக்குகிறார் அண்ணாமலை.

இபிஎஸ், ஓபிஎஸ் என அதிமுக பிளவுபட்ட பிறகு பாமக, பாஜக ஆகிய கட்சிகள் அதிமுகவிடம் கூடுதல் இடங்களை கேட்கின்றனர். மேலும், மோடியை பிரதமராக ஏற்றுக்கொண்டு கூட்டணி வைக்க ஓபிஎஸ், அன்புமணி, டிடிவி.தினகரன் ஆகியோர் தயாராக இருப்பதால் எடப்பாடி பழனிசாமியின் பேரவலிமை மிகவும் குறைந்துள்ளது.

இவ்வாறாக அதிக இடங்களை பாஜகவுக்கு கொடுத்து கூட்டணி வைத்தாலும் 2026 முதல்வர் வேட்பாளராக வருவதில் சிக்கல் ஏற்படும், இல்லை, அதிமுக தனித்து நிற்கும்பட்சத்தில் பாஜகவுடன் ஓபிஎஸ், பாமக, அமமுக ஆகிய கட்சிகள் ஒன்று சேர்ந்தாலும் அதுவும் 2026 பேரவைத் தேர்தலில் எடப்பாடி பழனிச்சாமி முதல்வர் வேட்பாளராவதை பாதிக்கும்.

ஆகவே ஓபிஎஸை கட்சியை விட்டு நீக்கியதால் அதிமுக பலவீனம் அடைந்திருப்பது தெரிகிறது. எடப்பாடி பழனிச்சாமியை கூட்டணியை விட்டு வெளியேற்ற வேண்டும் என்பதற்காக தான் அண்ணாமலை தொடர்ந்து இது போன்ற அரசியலை செய்து வருகிறார்.

அதிக இடங்களை கொடுத்து கூட்டணி வைத்தாலும் சரி அல்லது அதிமுக தனியாக நின்றாலும் சரி அது அண்ணாமலைக்கு லாபமே. அதேநேரத்தில், அண்ணாமலையை மாநிலத் தலைவராக கொண்ட பாஜகவுடன் கூட்டணி வைத்தால் அது அதிமுக தொண்டர்களிடையே மிகப்பெரிய மனச்சோர்வை ஏற்படுத்தும் என்றார் ரிஷி.

# எஸ்.என்.எஸ்., கல்விக் குழும வாலிபால் போட்டிகள்!



வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுக்கோப்பை வழங்கினார் எஸ்.என்.எஸ். கல்விக் குழுமத் தொழில்நுட்ப இயக்குநர் நளின் விமல்குமார்.

✍ **தி கோவை மெயில்**

எஸ்.என்.எஸ்., கல்விக் குழுமம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட வாலிபால் கழகம் இணைந்து கோயம்புத்தூர் வடக்கு மண்டல அளவிலான வாலிபால் போட்டியை எஸ்.என்.எஸ்., தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடத்தின.

16 அணிகள் கலந்துகொண்டன. இறுதிப்போட்டியில் என்.ஜி.பி. கல்லூரி அணி மற்றும் கோயம்புத்தூர் மண்டல காவல்துறை அணிகள் மோதின. இதில், 2 - 0 என்ற செட் கணக்கில் காவல் துறை அணி வென்றது.

மாவட்ட வாலிபால் கழகப் பொருளாளர் விஜயசந்திரன், வழக்கறிஞர் நடேசன், வாலிபால் கழக உறுப்பினர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.


**Kongunadu Arts and Science College (Autonomous)**
**College of Excellence (UGC)**
**Re-accredited by NAAC with "A+" Grade (4th Cycle)**
**29th rank among colleges in NIRF 2023**
**G.N. Mills (PO), Coimbatore-641029, Tamil Nadu, India.**

TNSCST | Estd. 1973

**தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்**
**TAMILNADU STATE COUNCIL FOR SCIENCE AND TECHNOLOGY**
**DOTE Campus, Chennai – 600 025 & NCSTC, Government of India, New Delhi**

G20 | Golden Jubilee 1973-2023

PG and Research Department of Biotechnology, Kongunadu Arts and Science College, Coimbatore will conduct one day Awareness Programme on **"Post COVID 19 Health and Hygiene Awareness Programme at Kotagiri Tribal Village, Nilgiris District** under Popularization of Science Activities" on 24.09.2023 (Sunday) supported by Tamilnadu State Council for Science and Technology, Government of Tamilnadu, Chennai and NCSTC, Government of India, New Delhi.

The Objectives of the programme are,


- To promote health literacy and sanitation among tribal girls and women post covid-19
- To educate importance of balanced diet, mitigate and manage the risk of malnutrition prevalent among tribal women and girls between the age group of 11 and 60 years.
- The Resource persons of the programme will be Dr O N Paramasivan, F.R.C.S., Senior Orthopaedic Surgeon, Kovai Medical Centre and Hospital, Coimbatore and Dr Arjun Paramasivan, B.Sc. (Hons), M. B., Ch.B., (Leeds) M.R.C.S., Merseyside NHS trust, UK, Member of College Council, Kongunadu Arts and Science College, Coimbatore.

At the end of the session, Distribution of Balanced diet chart, Nutritional powder and Sanitary napkins will be given to the girls and women.

### ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனர் மகாதேவ அய்யரின்

# நூற்றாண்டு விழாவையொட்டி சமூகப்பணி துவக்கம்!

**● மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கு புதிய சுகாதார வசதி**



மாணவர்கள் பயன்பாட்டிற்காக புதிய கழிப்பறைகளைத் திறந்து வைத்தார் மாநகராட்சி ஆணையாளர் பிரதாப். அருகில், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனத் தலைவர் கிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர் கார்த்திக் செல்வராஜ், செல்வம் ஏஜென்சிஸ் உரிமையாளர் நந்தகுமார், மாநகரக் கல்வி அலுவலர் முருகேசன், உதவி ஆணையர் சந்தியா ஆகியோர்.



✍ தி கோவை மெயில்

கோயம்புத்தூர் ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனம் சார்பில் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள புதிய கழிப்பறைகள் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டன.

ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருமான எம்.கிருஷ்ணன், அவர்களின் தந்தை என்.கே.மகாதேவ அய்யரின் நூற்றாண்டு விழாவை இந்த வருடம் முழுவதும் கொண்டாடத் திட்டமிட்டுள்ளார். அதன் ஒரு பகுதியாக, மாநகராட்சி மேற்கு மண்டலம் 72வது வார்டுக்கு உட்பட்ட ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு அரசின் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.32 லட்சம் மதிப்பில் 50 சதவீகித பங்களிப்பில் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனம் சார்பில் அதிநவீனக் கழிப்பறை திறந்துவைக்கப்பட்டது.

எம்.கிருஷ்ணன் பேசுகையில், ”ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனம் வாடிக்கையாளர்களுக்குத் தரமான உணவுப் பொருட்களைக் கொடுப்பது மட்டுமல்ல, மக்களுக்குப் பயன்தரும் நலத்திட்ட உதவிகளையும் தொடர்ந்து செய்வதே அதன் தலையாய நோக்கம். எனது தந்தையின் நூற்றாண்டு விழாவில் பல்வேறு அறச்செயல்களை மக்களுக்காக செய்யத் திட்டமிட்டுள்ளேன்’ என்றார்.

‘இவ்வாறான பொதுநலத் தொண்டுகள் சமூகத்தின் வளர்ச்சிப் பாதைக்கான அடிக்கல்’ என்று கூறிய மாநகராட்சி ஆணையாளர் மு.பிரதாப், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனத்தின் பொது நலத்திட்டங்கள் மாநகரை அடுத்த நிலைக்குக் கொண்டு சேர்க்க மனமார்ந்த வாழ்த்துகள்’ என்றார்.

**’சுகாதாரமான வாழ்வியல் முறையை எடுத்துரைக்கும்’**

‘ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனர் கிருஷ்ணன், எமது பள்ளியின் முன்னாள் மாணவர் என்பது மிகவும் பெருமை. தம் தந்தையின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் பொருட்டு, அவர் தான் பயின்ற பள்ளியில் இருந்தே பொதுமக்களுக்கான நலத்திட்டங்களைத் தொடங்கி இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது’ என்றார் பள்ளியின் தலைமை ஆசிரியர் சுந்தரராஜன்.



அதிநவீனத் தொழில்நுட்பத்துடன் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு சிறப்பான முறையில் இந்தக் கழிப்பறை கட்டித் தரப்பட்டுள்ளது. மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இந்த வசதியானது, தனியார் பள்ளிகளுக்கு இணையான தரத்துடன் உள்ளது. மாணவர்களுக்கு சுத்தம் மற்றும் சுகாதாரமான வாழ்வியல் முறையை எடுத்துரைக்கும் விதமாக அமைந்திருப்பதாக ஆசிரியர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

**’தானியங்கி நீர் மேலாண்மை வசதி’**

‘இந்த அதிநவீனக் கழிப்பறை கட்டடத்தில் தானியங்கி நீர் மேலாண்மை வசதியை அமைத்து இருப்பதால், இது தங்களுக்கு மேலும் பயனுள்ளதாக இருக்கிறது. கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனரின் முயற்சியினால், தற்பொழுது எங்கள் அனைவருக்கும் தனித்தனியான கழிப்பிட வசதி கிடைத்திருக்கிறது’ என மாணவர்கள் தங்கள் நன்றியை மகிழ்வுடன் பகிர்ந்துகொண்டனர்.

## மாணவர்கள் முழுமனதோடு கற்று திறன்பட செயலாற்ற வேண்டும் !

**- கவிதாசன்**

✍ தி கோவை மெயில்

சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளியில் மாணவர் தலைவர்கள் பொறுப்பேற்பு நிகழ்ச்சி அண்மையில் நடந்தது.

பள்ளி செயலர் கவிதாசன் தலைமை வகித்துப் பேசுகையில், “மாணவத் தலைவர்கள், தாங்களும் நல்வழியில் நடப்பதோடு சக மாணவர்களையும் நல்வழிக்கு அழைத்துச் செல்ல வேண்டும். இன்றைய மாணவர்கள் நாளைய உலகை ஆளக்கூடிய தலைமைப் பொறுப்பினை ஏற்கும் திறனைப் பெற வேண்டும். அதற்கு முழு மனதுடன் கல்வி கற்று, விருப்பத்துடன் செயல்களை செய்ய வேண்டும்.



பொது அறிவை வளர்த்துக்கொள்ள வாசிப்பு பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளக்கூடிய ஆற்றல் வேண்டும். மாணவர்கள் பள்ளியில் சிறுசிறு தலைமைப் பொறுப்புகளைப் பெறும்போது அத்தகைய ஆற்றலைப் பெற முடிகிறது” என்றார்.

கல்வி ஆலோசகர் கணேசன் மாணவர்களுக்குப் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். பொறுப்பேற்று கொண்ட மாணவர்கள், பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்போம் என உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். பள்ளி முதல்வர் உமாமகேஸ்வரி, துணை முதல்வர் சக்திவேல், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


KMCH BREAST CENTER Celebrating Womenhood Since 2012

# மார்பக பரிசோதனை முகாம்

செப்டம்பர் 18 - அக்டோபர் 14 வரை
(ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்கள் தவிர)
நேரம் : 9am - 3pm

யார் இந்த பரிசோதனையை மேற்கொள்ளலாம்?

40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் அல்லது கீழ்காணும் அறிகுறிகள் உள்ளவர்கள்

- மார்பகங்களில் வலி / கட்டி
- அக்குள்களில் வீக்கம்
- மார்பகக்காம்புகளில் கசிவு / பின்நோக்கி செல்லுதல்
- நெருங்கிய இரத்த சம்பந்த உறவுகளில் யாருக்காவது மார்பக புற்றுநோய் இருத்தல்

3D மேமொகிராம் Rs.1200/-

உயர்தர அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் Rs.600/-

முன்பதிவிற்கு : 97901 97971 | 0422 432 4151

BREAST CENTER

KMCH கோவை மெடிக்கல் சென்டர் & ஹாஸ்பிட்டல்

99, அவிநாசி ரோடு கோயமுத்தூர் - 641 014. | Ph : 0422 - 4323 800 - 4000 / 680 3000.

www.kmchhospitals.com

NABH PATIENT SAFETY & QUALITY OF CARE ACCREDITED

MAKING THE IMPOSSIBLE, POSSIBLE

# செல்வத்தை அள்ளித்தரும் கோவை திருமலா திருப்பதி!

✍ தி கோவை மெயில்

பெருமாளுக்கு மிகவும் உகந்த, சிறப்புமிக்க புரட்டாசி மாதத்தில், திருப்பதி ஏழுமலையானின் அதே பிரம்மாண்ட தோற்றத்தில், கொங்கு மண்டலத்தில் காட்சியளிக்கும் ஸ்ரீ வேங்கடாசலபதியின் சிறப்பம்சங்களைப் பற்றி பார்ப்போம்.

கோயம்புத்தூர், கொடிசியா பகுதியில் அமைந்திருக்கும் இத்திருத்தலத்தில் "திருப்பதி வேங்கடாசலபதி" என்னும் பெயரில் பக்தர்களுக்கு பெருமாள் காட்சி அளிக்கிறார். சிற்பக் கலைக்கு கருவூல அடையாளமாகத் திகழும் மாமல்லபுரத்தில் உருவாக்கப்பட்ட இப்பெருமாளின் திருமேனியானது சாளக்கிராம கல்லினால் ஆனது என்பது குறிப்பிடத்தக்கது.

**தல வரலாறு:-**

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டியில் உள்ள ஸ்ரீ அஞ்சலி வரத விஸ்வரூப ஆஞ்சநேயர் திருக்கோவிலில் ஓர் ஆண்டு ஜலாதிவாசம், இரண்டு ஆண்டு தான்யாதிவாசம் செய்யப்பட்ட பிறகு, பெருமாளை எந்த ஊரில் பிரதிஷ்டை செய்வது என்ற கேள்வி எழுந்தது.

அப்போது, பக்தர் ஒருவர் கனவில் தோன்றிய பெருமாள் தன் திருவுள்ளம் கொண்டு கோயம்புத்தூர் மாநகரில் கொடிசியா பகுதியில் உள்ள திருப்பதி வேங்கடாசலபதி நகரில், வேங்கடாசலபதியாக எழுந்தருள விருப்பம் தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது. இதனையடுத்து, சுபகிருது ஆண்டு ஆவணி மாதம் 16 ஆம் நாள் வியாழக்கிழமை சுபமிகு ஸ்வாதி நட்சத்திரத்தில் செப்டம்பர் 1, 2022 ஆம் ஆண்டு திருப்பதி வேங்கடாசலபதி கோயம்புத்தூர் மாநகரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்.

**சிறப்பம்சம்:**

இங்கு, திருமலா திருப்பதி கோயிலின் ஆகம விதிப்படி பூஜைகள் நடைபெறுகின்றன. புரட்டாசி சனிக்கிழமை போலவே வியாழக்கிழமையும் சிறப்பானது. வியாழக்கிழமைகளில் நேத்திர சேவை, நிஜபாத சேவை, தோமாலை சேவை எனும் பூலங்கி சேவை நடைபெறும். மேலும், திருவோண நட்சத்திர தினத்தன்று, பசும்பால், குங்குமப்பூ, மஞ் சள், சந்தனம், நவ கலசம் கொண்டு விசேஷ அபிஷேகம் நடைபெறுகிறது.



அந்நாளில் எம்பெருமாள் மஞ் சள், வெள்ளை, சிவப்பு போன்ற வண்ண மலர்களால் நேத்திர சேவை, நிஜ பாத சேவையில் காட்சியளிக்கிறார். மேலும், உலக நன்மைக்காக யாக பூஜை, மண்டபத்தில் பூப்பந்தல் அமைந்து 100 லிட்டர் பசும் பால் கொண்டு விசேஷ அபிஷேக ஆராதனை நடைபெறும்.

**அலங்கார ஆபரணங்கள்:**

இங்கு, கிழக்கு திசையில் வீற்றிருக்கும் பெருமாளுக்கு அணிவிக்கப்படும் அலங்காரங்கள் தனிச் சிறப்பு வாய்ந்தது. ஆகாச ராஜ கிரீடம், பச்சைக் கற்பூர திருமண் காப்பு, கஸ்தூரி திலகம், நாடியில் பச்சைக் கற்பூரம், வலது கரத்தில் சுதர்சன சக்ரம், இடது கரத்தில் பாஞ்சன்யம், இடையில் தசாவதார ஒட்டியாணம், சூர்ய கடாரி, இரு தோளிலும் புஜகீர்த்தி, நாகாபரணம், வலது மார்பில் மகாலட்சுமி, இடது மார்பில் அலர்மேல் மங்கா தாயாருடன் துளசி பத்ர ஆரம், வில்வ ஆரம், ஸ்வர்ண தண்டை போன்ற ஆபரணங்களை அணிந்து, விஷேச புஷ்ப அலங்காரத்துடன், ஆண்டாள் மாலை சார்த்தி தங்கத் தாமரை மீது அழகாய் காட்சியளிக்கிறார்.

**நைவேதனம் மற்றும் பிராத்தனை:**

பெருமாளுக்குப் பிடித்தமான சர்க்கரை பொங்கல், புளியோதரை, வெண் பொங்கல், தயிர் சாதம் போன்றவை படைக்கப்படுகின்றன.

கல்யாண உற்சவ சேவை, கருட சேவை, ஊஞ்சல் சேவை, சர்வ அலங்கார சேவை, தோமாலை சேவை, பச்சைக் கற்பூர திருமண் காப்பு சேவை, நூதன வஸ்திரம் சமர்ப்பணம், புஷ்ப அங்கி சேவை, வெண்ணெய் காப்பு சேவை, சந்தனக்காப்பு சேவை, அபிஷேக சேவை, இராஜ போக தளிகை நிவேதனம் சேவைகளைப் பெருமாளை வேண்டி பக்தர்கள் பிரார்த்தனை செய்வது வழக்கம். கூடுதலாக, திருப்பதி ஏழுமலையானிடம் வேண்டிக்கொண்ட பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை இங்கு நிறைவேற்றி வருகின்றனர்.

**தரிசன நேரம்:**

காலை 7:30 முதல் 11:30 மணி வரை, மாலை 5:30 முதல் 8:30 மணி வரையிலும் பெருமாளை தரிசிக்கலாம். சனி மற்றும் ஞாற்றுக்கிழமைகளில் காலை 7:30 முதல் 12:00 வரை, மாலை 5:30 முதல் 9:00 மணி வரையில் நடை திறந்திருக்கும்.



## கோயம்புத்தூர் உற்பத்தித் திறன் குழுவின் மனிதவள மாநாடு!

✍ தி கோவை மெயில்

கோயம்புத்தூர் உற்பத்தி திறன் குழுவின் சார்பில், 2023 ஆம் ஆண்டின் மனிதவள மாநாடின் மூன்றாவது பதிப்பின் தொடக்க விழா வியாழக்கிழமை தனியார் விடுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், உற்பத்தி திறன் குழுவின் தலைவர் அருள் வரவேற்புரை வழங்கினார். இதனையடுத்து, துணை தலைவர் சுதாகர் மனிதவள மாநாடின் முக்கியத்துவங்கள் குறித்து உரையாற்றினார்.

'தேவையானதைக் கொடுத்தால் தேவையானதைப் பெறலாம்'

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கே.பி.ஆர்., குழுமத்தின் தலைவர் கே.பி.ராமசாமி பேசியதாவது, மனிதவள மேம்பாட்டில் உள்ளவர்களால் மட்டுமே நிறுவனப் பிரச்னைகளை கையாள முடியாது. இவர்களின் பங்களிப்பு உள்ளபோதிலும் மனிதவளம் அல்லாத நிர்வாகிகளின் பங்கும் ஓர் நிறுவனத்திற்கு மிகவும் அவசியம். தற்போதைய வாழ்வியல் சூழ்நிலையில் ஊழியர்களிடம் மன அழுத்தம் அதிகமாக இருக்கிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு மனிதவளம் அல்லாத நிர்வாகிகளின் பங்கு தேவைப்படுகிறது




நிகழ்வை குத்துவிளக்கேற்றி துவக்கி வைக்கிறார் கே.பி.ஆர்., குழுமத்தின் தலைவர் கே.பி.ராமசாமி. அருகில், உற்பத்தி திறன் குழுவின் தலைவர் அருள், துணை தலைவர் சுதாகர், சி.பி.சி.,யின் முன்னாள் தலைவர் கவிதாசன் ஆகியோர்.

என்னுடைய மனிதவளக் கொள்கை என்பது அவர்களுக்கு தேவையானதைக் கொடுத்தால், உங்களுக்குத் தேவையானதை அவர்கள் கொடுப்பார்கள். இதனை அனைவரும் பின்பற்றினால் நல்ல வளர்ச்சி அடைய முடியும். மனிதவள மேம்பாட்டாளர் நினைத்தால் அனைத்தையும் நல்வழியில் எடுத்துச் செல்ல முடியும்' என்றார்.

சி.பி.சி.,யின் முன்னாள் தலைவர் மற்றும் ரூட்ஸ் குழும மனிதவள இயக்குநர் கவிதாசன் பேசுகையில், சக ஊழியர்களிடம் அக்கறை, பகிர்தல் உள்ளிட்ட பண்புகளுடன் மனிதவள மேம்பாட்டாளர்கள் நடந்துகொள்ள வேண்டும். நம்முடன் வேலை செய்பவர்கள் நமக்கானவர்கள் என்று எண்ணினால் பிரச்னைகள் வராது. வேலை செய்யும் இடத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்க வேண்டும். வீட்டில் மகிழ்ச்சியாக இருக்கும் நபரால் வேலை செய்யும் இடத்தில் தனது திறமைகளை முழுமையாக செயல்படுத்த முடியும். குழந்தைகள் முதல் பெரியவர்களை வாழ்த்த, வணங்கக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒருவரிடம் கண்டிப்பாக இருக்க வேண்டும், அதேசமயம் கடினமாக இருக்கக் கூடாது என்பதைத் தெரிந்துகொள்வது தொழில்துறையில் அவசியமான ஒன்று.

இத்தகைய மனிதவளத் திறன்களை, தங்களது மனிதவள மேம்பாட்டு நிறுவனர்களைக் கொண்டு முதல்முறையாக கே.பி.ஆர். நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் பொருட்டு புதிய முயற்சியை எடுக்க உள்ளோம்.

மேலும், ஒருநாள் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பல்வேறு தலைப்புகளில் நிபுணர்கள் உரையாற்றினர்.

## காணும் திசையெங்கும் பி.எஸ்.ஜி மத்திய அமைச்சர் அனுராக் சிங் தாகூர் பேச்சு

✍ தி கோவை மெயில்

பி.எஸ்.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சனிக்கிழமையன்று 'நியூ இண்டியா டிபேட்ஸ்' நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பி.எஸ்.ஜி. அறநிலையத்தின் நிர்வாக அறங்காவலர் எல். கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு துறை அமைச்சரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சருமான அனுராக் சிங் தாகூர் கலந்துகொண்டார்.

இதில் கல்லூரி முதல்வர் பிருந்தா இந்நிகழ்ச்சியில் வரவேற்புரையாற்றினர்.

அனுராக் சிங் தாகூர் தனது சிறப்புரையில், "2012 யில் நான் முதன்முறையாக கோவைக்கு வருகை புரிந்தேன். அப்போது சாலையில் பயணிக்கும் போது காணும் திசையெங்கும் பி.எஸ்.ஜி. என இருந்தது. அந்த அளவிற்கு பி.எஸ்.ஜி அறநிலையம் ஏராளமான கல்விநிலையங்களை நடத்தி வருகிறது. இங்கு பயின்ற மாணவர்கள் பல பேர் தற்பொழுது உயர்ந்த பதவியில் சிறந்து விளங்குகின்றனர்" என்றார். மேலும் மத்திய அரசு செயல்படுத்தியுள்ள திட்டங்களை குறித்தும், இந்தியாவின் வளர்ச்சியை குறித்தும் விளக்கி மாணவர்களுடன் கலந்துரையாடினார்.அதோடு வினாடிவினா போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசளித்தார்.

விழாவின் நிறைவாக செயலர் கண்ணையன் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நியூ இண்டியா டிபேட்ஸ் ஒருங்கிணைப்பாளர் கிருத்திகா, கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.




மத்திய அமைச்சர் அனுராக் சிங் தாகூர், விநாடிவினா போட்டியில் வெற்றிபெற்ற மாணவிக்கு சான்றிதழை வழங்குகிறார். உடன், பி.எஸ்.ஜி. அறநிலையத்தின் நிர்வாக அறங்காவலர் கோபாலகிருஷ்ணன், பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி முதல்வர் பிருந்தா, நியூ இண்டியா டிபேட்ஸ் ஒருங்கிணைப்பாளர் கிருத்திகா ஆகியோர்.



கே.பி.ஆர். கல்லூரியில்

## இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை

✍ தி கோவை மெயில்

கே.பி.ஆர். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை இணைந்து "இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை" எனும் நிகழ்வை அண்மையில் நடத்தின. இந்நிகழ்விற்கு கே.பி.ஆர். குழுமங்களின் தலைவர் கே. பி. ராமசாமி தலைமை வகித்தார்.

நிகழ்வில் வரவேற்புரை வழங்கிய தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநர் அவ்வை அருள், "தமிழர்களின் மாண்புகளை இலக்கியங்களின் வாயிலாக இன்றைய மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இந்த பாசறையின் மூலம் இளைஞர்களை மேலும் மெருகேற்ற முடிகிறது." என்று பேசிய அவர்.,

"தமிழ் வளர்ச்சி துறை சார்பில் நடைபெறும் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் முன்பை விட தற்போது அதிகமானோர் கலந்து கொள்கின்றனர். அதில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு அரசு சார்பில் 15,000 ரூபாய் பரிசு வழங்கப்படுகிறது" என்றார்.

அவரை தொடர்ந்து வழக்கறிஞர் இலக்கியச்சுடர் இராமலிங்கம், நா.கி. பிரசாத், கவிதாயினி மீ. உமா மகேஸ்வரி, தெ. கணேஷ்குமார், வழக்கறிஞர் சிவகுருநாதன், நெல்லை ஜெயந்தா ஆகியோர் சொற்பொழிவாற்றினார்.

கே.பி.ஆர். குழுமங்களின் தலைவர் கே. பி. ராமசாமி பேசுகையில், தனக்கு 1962ல் தமிழ் கற்று தந்த தமிழாசிரியர் சடையப்பனை நினைவு கூர்ந்தார். திருக்குறளை எளிதாக ஞாபகம் வைத்துக்கொள்ள அவரின் தமிழாசிரியர் கூறிய உதாரணங்களையும், கடினமான இலக்கணப் பாடங்களை எளிமையாக கற்றுத்தந்த முறையையும் விளக்கினார். அவரின், தமிழாசிரியர் போல் இன்றைய ஆசிரியர்களும் சிறந்து விளங்கவேண்டும் என அறிவுறுத்தினார். மேலும் இந்நிகழ்வில் பங்கேற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார்.

மேலும், கே.பி.ஆர். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் இராமசாமி, இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறையின் மாநில ஒருங்கிணைப்பு அலுவலர் நெல்லை ஜெயந்தா, விஜயா பதிப்பகத்தின் உரிமையாளர் வேலாயுதம் ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்று பேசினர்.

## கோவை மக்கள் மனதில் குடியிருக்கும் எஸ்.கே.எஸ் மைசூர்பா




கோயம்புத்தூர் மக்கள் மனதில் குடியிருக்கும் எஸ்.கே. எஸ் மைசூர்பா மைசூர்பா தினத்தையொட்டி கோயம்புத்தூர் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கிளைகளில் (எஸ்.கே.எஸ்) அரை கிலோ மைசூர்பா 100 ரூபாய்க்கு எனும் சிறப்பு விற்பனை அண்மையில் நடைபெற்றது. பொதுமக்கள் பலரும் மகிழ்வுடன் நீண்ட வரிசையில் நின்று வாங்கிச் சென்றனர்.

**உலக இருதய தினத்தை முன்னிட்டு கே.ஜி மருத்துவமனை நடத்திய விழிப்புணர்வு பேரணி!**

# ஏழை, பணக்காரர் என பார்த்து வருவதில்லை மாரடைப்பு!




**- கே.ஜி.பக்தவச்சலம், தலைவர், கே.ஜி.மருத்துவமனை**

உடலின் மிக முக்கியமான உறுப்புகளில் ஒன்று இதயம். அத்தகைய இதய ஆரோக்கியம் குறித்து பொதுமக்கள் விழுப்புடன் இருக்க ஆண்டு தோறும் உலக இருதய தினம் கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தை முன்னிட்டு கே.ஜி மருத்துவமனை சார்பில் சைக்கிள் பேரணி (சைக்ளோத்தான்) மற்றும் நடைப் பயணம் (வாக்கத்தான்) பேரணிகள் சனிக்கிழமை நடந்தன.

கே.ஜி மருத்துவமனையில் தொடங்கிய இந்த பேரணி ரேஸ் கோர்ஸ், வருமான வரிதுறை அலுவலகம் வழியாக மீண்டும் கே.ஜி மருத்துவமனையை அடைந்தது. சுமார் 5 கிலோமீட்டர் வரை நடைபெற்ற பேரணியில், கே.ஜி மருத்துவமனையின் தலைவர் டாக்டர். கே.ஜி. பக்தவச்சலம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

"உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாகத்தான் தெரியும், ஆனால் தீடிரென மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழக்க நேரிடும், ஆகையால் இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பது மிகவும் அவசியம்" என்கிறார் கே.ஜி மருத்துவமனையின் தலைவர் டாக்டர். ஜி. பக்தவச்சலம்.

ஏழை, பணக்காரர் என்றெல்லாம் பார்த்து மாரடைப்பு வருவதில்லை. மாரடைப்பு ஏற்படுவதற்கான முக்கிய காரணங்கள் உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால், புகை மற்றும் மது பழக்கம், நீரிழிவு, உணவு பழக்கம் போன்ற பல காரணங்களால் ஏற்படுகின்றது. மேலும், உடல் பருமனும் ஒரு காரணமாக கருதப்படுகிறது. இன்றைய நவீன காலத்தில் 19வயதினருக்கும் மாரடைப்பு வருவதை காண முடிகிறது.

இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க வீட்டில் சமைத்த உணவுகளை சாப்பிடுங்கள். மேலும், எண்ணெயில் பொறித்த உணவுகள், துரித உணவுகள் எனப்படும் 'ஜங் புட்' போன்றவற்றை எடுத்துக் கொள்ள வேண்டாம். இதயம் சீராக இயங்க நமது அன்றாட வாழ்வியல் முறையில் ஆரோக்கியமான உணவு, தியானம், உடற்பயிற்சி, யோகா போன்றவற்றை கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். அதுமட்டுமல்லாமல், மன அழுத்தத்தை கட்டுப்படுத்துவது, போதுமான உறக்கம் ஒருவரை ஆரோக்கியமாக செயல்பட உதவும்.

**'மாரடைப்பால் நிகழும் உயிரிழப்புகள் அதிகம்'**

நெஞ்சு வலிப்பதுபோல் இருந்தால் உடனடியாக அருகில் இருக்கும் மருத்துவமனைக்கு செல்லுங்கள். தாமாக கார் அல்லது பைக் ஓட்டிச் செல்வதை கூடுமானவரை தவிர்த்துவிடுங்கள். என் அறுபது ஆண்டுகால மருத்துவத்துறை அனுபவத்தில் மாதத்திற்கு ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்த காலம், தற்போது இல்லை. மாரடைப்பால் நிகழும் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன.

இந்தியாவில், சக்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை முதலிடத்திலும், இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இரண்டாவது இடத்திலும் உள்ளது. இந்தநிலை விரைவில் மாறும் அபாயம் உள்ளதால், இதய ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம்.

ஆகையால், மாஸ்டர் ஹெல்த் செக்கப் எனும் முழு உடல் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். மேலும், கே.ஜி மருத்துவமனையில் ரூபாய் 5,000க்கு செய்யப்படும் இருதய பரிசோதனை தற்போது ரூபாய் 1,100 க்கு செய்யப்படுகிறது. அதேபோல், 120 ஸ்லைஸ் சிடி ஸ்கேன் ரூபாய் 14,000க்கு செய்யப்படுகிறது.














**"30 நிமிடம் உடற்பயிற்சி தேவை"**

சராசரியாக ஒருவருக்கு ஒரு நாளில் 30 நிமிடம் உடற்பயிற்சி தேவைப்படுகிறது. அதிலும், உள்புறச் செயல்பாடுகளை விட வெளிப்புறச் செயல்பாடுகளே சிறந்தது. மேலும், தினமும் 30 நிமிடம் சைக்கிள் ஓட்டி வருவதால், இதயங்களை பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவும் என்று பேரணியில் கலந்து கொண்ட தன்னார்வலர் கூறினார். இந்த விழிப்புணர்வு பேரணியில் மருத்துவர்கள், நோயாளிகள், கே.ஜி சுகாதார அறிவியல் கல்லூரி மாணவர்கள், தன்னார்வலர்கள் என பலர் பங்கேற்று பயனடைந்தனர்.












# கோபத்திலிருந்து விடுதலை... எப்போது?

✍ தி கோவை மெயில்

'கோபம்' எனும் எதிர்மறை உணர்வு நமக்குள் உண்டாக்கும் இரசாயனங்கள் நமக்கே நஞ்சாகும் அறிவியலை அறிந்திருக்கும்போதிலும், கோபத்திலிருந்து விடுதலை அடைவதற்கு தடைகள் இன்னும் பலருக்கு உள்ளது! கோபம் வருவதற்கான காரணத்தையும் அதிலிருந்து விடுதலை அடைவதற்கான வழியையும் பற்றி சத்குரு பேசுகிறார்!

கேள்வி: கோபத்திற்கு வெளிச்சூழ்நிலை காரணம் இல்லையென்று குறிப்பிட்டிருந்தீர்கள் இதை பற்றி விளக்கம் கூறுங்கள்?

சத்குரு: நீங்கள் யார் மீதும் கோபப்படவில்லை. நீங்கள் கோபமாக இருக்கிறீர்கள். உங்கள் கோபத்திற்கும், இன்னொருவருக்கும் எந்த சம்பந்தமுமில்லை. நீங்கள் பாறை மீது கோபமாயிருக்கிறீர்களோ, உங்கள் குரு மீது கோபமாய் இருக்கிறீர்களோ, கடவுள் மீது கோபமாக இருக்கிறீர்களோ கோபம் என்றால் கோபம்தான். இது இன்னொன்றோடோ இன்னொருவரோடோ செய்வதற்கு ஏதுமில்லை. இதை முதலில் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். உங்கள் கோபம் பிறரோடு எந்தவிதத்திலும் தொடர்புடையதில்லை. முழுக்க முழுக்க உங்களோடு தொடர்புடையதுதான். உங்கள் கோபம் இன்னொருவரோடு நிகழ்வது என்று நினைப்பதால்தான் நீங்கள் திரும்ப திரும்ப கோபப்படுகிறீர்கள். அது உங்களை மட்டுமே சார்ந்தது என்று நீங்கள் அறிந்திருப்பீர்களேயானால் அது இவ்வளவு நேரம் உங்களிடம் இருந்திருக்காது.

எனவே ஏதோ ஒன்றைப் பற்றி கோபப்பட்டு வருத்தப்படுவதென்பது நான் சொன்னாலும் சரி, பிறர் சொன்னாலும் சரி, இது ஓர் ஆழமான விருப்பு, வெறுப்பின் விளைவாக வருவது. இந்த ஆழமான விருப்பு, வெறுப்பு என்பது ஒரு குறிப்பிட்ட மனநிலை, உணர்வுநிலை அல்லது வாழ்க்கை முறையின் வெளிப்பாடு அல்லது அடையாளம். இதுதான் வாழ்வதற்கான சிறந்த வழி. இதுதான் சிந்திப்பதற்கும், உணர்வதற்குமான வழி என்று நீங்கள் கருதுவதால் நிகழ்வது. அதற்கு யாரும் ஒத்துவராவிட்டாலும் உங்களுக்குக் கோபம் வருகிறது. உங்கள் விருப்பு, வெறுப்புகள் வலிமையாகிறபோது உங்கள் அடையாளங்கள் ஆழமாகியபோது நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு எதிராக போகிறீர்கள். "இது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று சொன்னால் புறக்கணிப்பும் வளர்கிறது. எனவே விடுதலைக்கான வழி எல்லாவற்றையும் உங்களுக்குள்ளே சேர்த்துக் கொள்வதே தவிர, சிலவற்றை விலக்குவதல்ல. ஒன்றை விலக்குவதன் மூலம் நீங்கள் மறுபடியும் சிக்கிக் கொள்கிறீர்கள். எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்வதின் மூலம் நீங்கள் விடுதலை அடைகிறீர்கள்.

**உங்கள் கோபம் பிறரோடு எந்தவிதத்திலும் தொடர்புடையதில்லை. முழுக்க முழுக்க உங்களோடு தொடர்புடையதுதான். உங்கள் கோபம் இன்னொருவரோடு நிகழ்வது என்று நினைப்பதால்தான் நீங்கள் திரும்ப திரும்ப கோபப்படுகிறீர்கள். அது உங்களை மட்டுமே சார்ந்தது என்று நீங்கள் அறிந்திருப்பீர்களேயானால் அது இவ்வளவு நேரம் உங்களிடம் இருந்திருக்காது**



# அவர் எடுக்கும் முடிவே எங்கள் முடிவு

## கூட்டணி குறித்து எஸ்.பி.வேலுமணி



பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றிய அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி.

✍ தி கோவை மெயில்

கோவை மாவட்ட அதிமுக அலுவலகத்தில் பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம் அண்மையில் நடந்தது.

அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, 'எடப்பாடி பழனிசாமி பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கொண்டு வந்ததால் அவருக்கு மதுரையில் நடைபெற்ற மாநாட்டில் புரட்சித்தமிழர் பட்டம் கொடுக்கப்பட்டது. தற்போது ஆட்சியில் இருக்கும் திமுக கோவையில் எந்த ஒரு திட்டத்தையும் கொண்டுவரவில்லை. உதயநிதி ஸ்டாலின் உழைக்காமல் கட்சிப் பதவியில் பொறுப்பேற்று இப்போது பெரிய தலைவராக மாறியுள்ளார். திமுக தான் எங்களுடைய எதிரி. எதிர்க்கட்சித் தலைவராக எடப்பாடி பழனிசாமி சிறப்பாக செயல்படுகிறார். கூட்டணி குறித்து அவர் எடுக்கும் முடிவுதான் ஒட்டுமொத்த அதிமுகவின் முடிவு, எனவே தேர்தலில் அதிமுகவினர் எந்த கருத்து வேறுபாடும் இல்லாமல் செயல்பட வேண்டும்' என்றார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்காக கோவையில் அமைக்கப்படவுள்ள பூத் கமிட்டி, மகளிரணி, இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை குறித்து தீர்மானிக்கப்பட்டன.

எம்.எல்.ஏ.க்கள் தாமோதரன், பொள்ளாச்சி ஜெயராமன், ஏ.கே. செல்வராஜ், பி.ஆர்.ஜி.அருண்குமார், அம்மன் அர்ச்சுனன், கே.ஆர்.ஜெயராம், அமுல் கந்தசாமி, சூலூர் கந்தசாமி, முன்னாள் அமைச்சர் வேலுச்சாமி, அவைத்தலைவர் சிங்கை முத்து, பொருளாளர் பார்த்திபன், துணை செயலாளர் துரைசாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## 33 சதவீத இடஒதுக்கீடு மசோதா - பெண்களின் வரப்பிரசாதம்!

✍ தி கோவை மெயில்

கோவை பாஜக மகளிரணியைச சேர்ந்த 133 பெண்கள் "33" என்ற எண் வடிவில் நின்றபடி, மத்திய அரசு கொண்டு வந்துள்ள பெண்களுக்கான 33 சதவீத இடஒதுக்கீடு மசோதாவை வரவேற்றனர்.

அவிநாசி சாலையில் அமைந்துள்ள ஜென்னி கிளப் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாஜக கோவை மாவட்ட மகளிரணி தலைவர் ஜெய்ஸ்ரீ தலைமை வகித்தார். இதுகுறித்து பேசிய அவர், "பிரதமர் நரேந்திரமோடி அமல்படுத்தியுள்ள மகளிர்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டு பெண்களுக்கான வரப்பிரசாதம் ஆகும். பெண்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடக்காமல் வாழ்வில் முன்னேற்றமடைய இது உதவுகிறது. இதனை வரவேற்க்கும் விதமாக இந்நிகழ்வு நடைபெறுகிறது" என்றார்.

## கைவினைப் பொருட்கள் கண்காட்சி

✍ தி கோவை மெயில்

தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் கவுன்சில் சார்பில், கைவினைப் பொருட்கள் கண்காட்சி அவினாசி சாலையில் உள்ள சுகுணா கல்யாண மண்டபத்தில் மூன்று நாட்கள் நடைபெற்றது.

கவுன்சிலின் உறுப்பினர்கள் மற்றும் கைவினைக் கலைஞர்களின் நலனுக்காக நிதி திரட்ட ஆண்டுதோறும் இந்த கண்காட்சி நடத்தப்படுவது வழக்கம். அந்த வகையில் நடைபெற்ற இந்நிகழ்வின் துவக்க விழாவில் சிருஷ்டி கன்வினர் வெங்கடலட்சுமி, தலைவர் மஞ்சு இளங்கோ, உதவித் தலைவர் ரூபாவிஷ்ணு, செயலாளர் ஜெயஸ்ரீ ரவி, பொருளாளர் லட்சுமி ராமச்சந்திரன் ஆகியோர் குத்துவிளக்கேற்றினர்.

இந்தியாவின் கைவினைஞர்களால் உருவாக்கப்பட்ட கைவினைப்பொருட்கள், ஆண், பெண், குழந்தைகள் என அனைவருக்கும் ஏற்ற ஆடை வகைகள், வீட்டு அலங்காரப் பொருட்கள், நகைகள் புதுமையான முறையில், கற்பனைத் திறன் கொண்டு வடிவமைக்கப்பட்ட பொருட்கள் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

# உலக அல்சைமர் தின விழிப்புணர்வு வாக்கத்தான்

✍ தி கோவை மெயில்

உலக அல்சைமர் தினத்தை முன்னிட்டு இன்ஹவுஸ் மெடிக்கேர் வாக்கத்தான் விழிப்புணர்வு நிகழ்வு ரேஸ்கோர்ஸ் சாலையில் நடைபெற்றது.

செவிலியர்கள், மாணவ, மாணவிகள், மருத்துவர்கள் விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி நடைப்பயணம் மேற்கொண்டனர்.

இதுகுறித்து ஆட்சியர் பேசியதாவது, 'தற்போது அல்சைமர் நோயானது தினசரி அதிகரித்து வருகிறது. சாதாரண சூழ்நிலையில்கூட பிள்ளைகள் தங்களது பெற்றோரை கவனிப்பதில்லை. இந்நிலையில் அல்சைமர் என்னும் கடினமான சூழ்நிலையை அவர்கள் சந்திக்கும்போது அது மிகவும் சவாலானதாக இருக்கக்கூடும்.

இதற்கெல்லாம் விழிப்புணர்வு என்பது மக்களிடம் இருந்தால் மட்டுமே அதனை எவ்வாறு சமாளிப்பது என்பதனைத் தெரிந்துகொள்ள முடியும். இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்வுகள் இந்நோய் குறித்து நல்ல வழிகாட்டுதலை மக்களுக்கு வழங்குகிறது. அல்சைமர் நோய் நரம்பியல் சிதைவுகளால் ஏற்படும் நோயாகும். தற்போதைய இளைஞர்கள், முதியோர் இந்நோய் குறித்து விழிப்புணர்வு இல்லாமல் இருக்கின்றனர். ஆகையால் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாக்கத்தான் நிகழ்வானது நடைபெற்றது' என்றார். இந்நிகழ்வில் சுமார் 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.




வாக்கத்தான் நிகழ்ச்சியைக் கொடியசைத்து துவக்கி வைத்தார் மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார்.

## வாழ்க்கை எனும் போர்க்களத்தில் வெற்றிபெற கல்விதான் சிறந்த ஆயுதம்!

**- சைலேந்திர பாபு**



✍ தி கோவை மெயில்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலையில் மாபெரும் தமிழ்க் கனவு எனும் தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு பரப்புரை நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தமிழக காவல்துறையின் முன்னாள் தலைமை இயக்குனர் சைலேந்திர பாபு நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு 'எனக்குள் ஒரு தலைவன் ' எனும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது, "மாணவர்கள் இந்த உலகை தெளிவான கண்ணோட்டத்தில் பார்க்க உதவும் கண்கண்ணாடி தான் இந்த மாபெரும் தமிழ்க் கனவு எனும் தமிழ் மரபு மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சி. இங்குள்ள அனைவரும் சமம். மற்றவருக்கு உதவி செய்பவன் உயர்ந்த மனிதன். வாழ்வில் நாம் எந்த நிலையை அடைந்தாலும் கர்வம் என்பது இருக்க கூடாது. அன்பும் மரியாதையும் இருக்கும் இடத்தில் நாம் இருக்க வேண்டும். இதுவே தமிழர் பண்பாடு.

அனைவரிடத்திலும் திறமை உள்ளது. அதனை வெளிப்படுத்தும் போது தான் வாழ்வில் முன்னேற முடியும். வாழ்க்கை என்னும் கடினமான போரில் வெற்றியடைய கல்வி ஒரு பலமான ஆயுதம். சிந்தனை, படைப்பாற்றல், ஆர்வம், தகவல் பரிமாற்றம், ஒத்துழைப்பு ஆகியவை கல்வியில் உள்ளடங்கும். தினந்தோறும் வாசிப்பு பழக்கம், உடற்பயிற்சி உள்ளிட்டவற்றை பின்பற்றினால் வாழ்வில் நல்லநிலைக்கு செல்லலாம்" என்று மாணவர்களை ஊக்குவித்தார். மேலும், அவர் புத்தகங்களிலிருந்தும் தான் பெற்ற அனுபவங்களிலிருந்தும் கற்றதை மாணவர்களிடம் பகிர்ந்தார்.

இந்நிகழ்ச்சியில், கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பதிவாளர் தமிழ்வேந்தன், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோஆப் டெக்ஸில் தீபாவளி சிறப்பு விற்பனை துவக்கம்!

✍ தி கோவை மெயில்

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கோஆப் டெக்ஸ் நிறுவனத்தின் சிறப்பு விற்பனை வியாழக்கிழமை துவங்கியது.

கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் குத்துவிளக்கேற்றி, முதல் விற்பனையைத் துவக்கி வைத்தார். இங்கு, பாரம்பரியமிக்க பட்டு இரகங்களான காஞ்சிபுரம், ஆரணி, சேலம், கோவை, திருபுவனம், ராசிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி பட்டு இரகங்கள் வாடிக்கையாளர்கள் விரும்பும் வகையில் தற்காலத்திற்கு ஏற்ற புதிய வடிவமைப்புகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. தீபாவளியை முன்னிட்டு சிறப்பு விற்பனையாக கைத்தறி இரகங்களுக்கு 30 சதவீகிதம் அரசு சிறப்பு தள்ளுபடி வழங்குகிறது.



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கோஆப் டெக்ஸ் நிறுவனத்தின் முதல் சிறப்பு விற்பனையைக் கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் வாடிக்கையாளர்களிடம் வழங்கி துவக்கி வைத்தார். அருகில், முதுநிலை மண்டல மேலாளர் நந்தகோபால், ரகம் மற்றும் பகிர்மான முதுநிலை மேலாளர் ஜெகநாதன் மருதம், கோஆப்டெக்ஸ் விற்பனை மேலாளர் செல்வன், கோஆப்டெக்ஸ் நிறுவனப் பணியாளர்கள்.

இங்கு புதிய வடிவமைப்புகளில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டு மற்றும் பருத்தி சேலைகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உரைகள், வேட்டிகள், லுங்கிகள், துண்டு ரகங்கள், திரைச் சீலைகள், ரெடிமேடு சட்டைகள், சுடிதார் இரகங்கள், குர்தீஸ் வகைகள், பலதரப்பட்ட நவீன பைகள், குல்ட் ரகங்கள், ஆர்கானிக் சேலைகள், ஏற்றுமதி தரம் வாய்ந்த ஹோம் பர்னிசிங் இரகங்கள் என ஏராளமான வகைகள் உள்ளன. முதுநிலை மண்டல மேலாளர் நந்தகோபால், ரகம் மற்றும் பகிர்மான முதுநிலை மேலாளர் ஜெகநாதன் மருதம், கோஆப்டெக்ஸ் விற்பனை மேலாளர் செல்வன் மற்றும் பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## கிரிக்கெட் வீரர் தீபக்கின் 'டிநைன் ஸ்போர்ட்ஸ்' நிறுவனம் துவக்கம்

✍ தி கோவை மெயில்

கிரிக்கெட் வீரர் தீபக் சஹர் டிநைன் ஸ்போர்ட்ஸ் (DnineSports) என்ற கிரிக்கெட் ஷூ தயாரிப்பு நிறுவனத்தைத் துவக்கியுள்ளார்.

இந்த ஷூக்கள் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்டிருப்பதோடு மட்டுமின்றி, சர்வதேச பிசியோதெரபிஸ்டுகள், பயிற்சியாளர்கள், விளையாட்டு வீரர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து நிறுவனர் தீபக் சஹர் கூறியதாவது, "டிநைன் நிறுவனம் விளையாட்டு உலகில் புரட்சியை ஏற்படுத்தப் போகிறது. அதிநவீன தொழில்நுட்பத்தின் மூலம் இந்நிறுவனம் அதன் தயாரிப்புகளில் நிகரற்ற சொகுசு மற்றும் செயல்திறன் மேம்பாட்டை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த பிராண்டில் அரை மற்றும் முழு ஸ்பைக் கொண்ட கிரிக்கெட் ஷூக்கள், ஹெல்த் சப்ளிமெண்ட்ஸ், சட்டைகள், தொப்பிகள், பைகள் போன்ற தயாரிப்புகள் உள்ளன" என்றார்.



## Daughters of truck drivers to get Scholarship for education

✍ The Covai Mail

Mahindra Truck and Bus Division (MTBD) has announced a noteworthy initiative on Drivers' Day – the Mahindra Saarthi Abhiyaan project, which will provide scholarships to the daughters of truck drivers.

This initiative aims to support the education of these young girls and empower them. Mahindra is a pioneer among commercial vehicle manufacturers in this effort, offering scholarships of Rs.10,000/- along with certificates to selected candidates. The program benefitted 8928 girls so far.

In February-March 2024, Mahindra plans to felicitate each scholarship recipient at select locations. A total of 1100 scholarships will be awarded to the daughters of truck drivers.

## Amazon Launches Multi Channel Fulfilment

✍ The Covai Mail

Amazon.in has introduced Multi-Channel Fulfilment (MCF) in India, offering sellers, including D2C brands and retailers, a game-changing solution for streamlining fulfillment operations. MCF leverages Amazon's extensive presence, cutting-edge fulfillment centers, and logistics capabilities, allowing sellers to efficiently handle customer orders from various sales channels, including their websites. This empowers them to enhance the customer experience and expand their market reach, as Amazon has coverage of over 20,000 serviceable pin codes in India.

MCF simplifies order creation, tracking, and tax invoice generation for off-Amazon customers while ensuring swift shipping. Sellers benefit from Fulfilment by Amazon (FBA), an all-inclusive storage and fulfillment solution that optimizes operations.

## Rapido launches loans for women

✍ The Covai Mail

Rapido is taking significant steps to empower women auto captains in Coimbatore. This initiative includes micro-loans, family health insurance, and reduced commissions, designed to make it easier for women to thrive in the ride-hailing industry.

Coimbatore currently boasts over 50 active female captains on Rapido, and the company aims to onboard more than 200 active captains in the next three months through collaborations with local NGOs. These women captains will receive essential safety and driving skills training, enabling them to earn between Rs. 800 to Rs. 1000 per day, contributing to a monthly income of Rs. 25,000 to Rs. 30,000.

To mark this empowering initiative in Coimbatore, Rapido Auto organized an informative session and registration event at their Coimbatore office.

## Yuva Kabaddi Series 2023

The sixth edition of the Cars24 Yuva Kabaddi Series 2023, known for nurturing India's Kabaddi talent, is set to commence at Madurai's Fatima College Indoor Stadium from September 24 to October 22.

This event offers a platform for U-23 players weighing below 80 kgs to hone their skills, with 1100 youth participants competing in 618 matches under the guidance of 60 coaches and 153 officials. This monsoon edition will feature 300+ players from 16 states battling it out in 132 intense matches. The tournament will be inaugurated by Palanivel Thiagarajan, Tamil Nadu Minister of Information Technology and Digital Services.

# Made in India products are valued globally!

**- Dr. Tamilisai Soundararajan,** *the Governor of Telangana*

✍ The Covai Mail

The Y20 Talk event on "Future of Work: Industry 4.0, Innovation, and 21st Century Skills" was held in association with Kongunadu Arts and Science College and DOBBS Public School, Saravanampatti, at the KASC Auditorium on September 23, 2023. The event was graced by the presence of the Chief Guest Dr.Tamilisai Soundararajan, the Governor of Telangana & Lt. Governor of Puducherry.

Notable dignitaries including Namassivayam, Home Minister of Puducherry, Chandira Priyanga, Minister of Transport, Puducherry, and Nainar Nagendran, Member of Legislative Assembly, Tirunelveli, were also present as the Guests of Honour.

The welcome address was delivered by Abisheak Asir, State Convenor of Y20 India, and C.A. Vasuki, Secretary & Director of KASC, delivered the Presidential address. Karthikeyan, Correspondent of DOBBS Public School, Coimbatore, and Shridaar, State Co-Convenor of Y20 India, graced the occasion as well.

C.A. Vasuki, KASC Secretary, expressed that it is crucial to channel the potential of youth towards constructive endeavours, providing them with the necessary tools and platforms for self-expression.



*Chief Guest Dr. Tamilisai Soundararajan, Governor of Telangana lighting the lamp along with C. A. Vasuki, Secretary & Director, KASC, Namassivayam, Home Minister, and Chandira Priyanga, Minister of Transport of Puducherry, Nainar Nagendran, Member of Legislative Assembly, Tirunelveli, Abisheak Asir, State Convenor, Y20 India and other dignitaries in the Y20 Talk at KASC*

She emphasized the importance of holistic youth development, including upskilling and reskilling, along with preserving India's rich heritage and culture to address both national and global challenges.

She pointed out the significant growth of India's innovation and startup ecosystem, citing that in February 2023, there were 92,683 startups, with 80% of them being managed by individuals below 35 years of age. She praised the government's support for youth-driven startups.

Furthermore, she mentioned that their college had received a message from ISRO about being selected to exhibit ISRO's Exhibition during World Space Week on their campus, which brought great happiness.

The Chief Guest celebrated the 33% reservation for women as a victory for women's empowerment. She emphasized that while G20 represents governments, Y20 is the platform for youth to lead the nation to greater heights.

Highlighting the importance of economy, environment, education, health, and sports, she urged youth to protect the environment by reducing plastic use, planting trees, and cutting carbon emissions. She praised India's self-reliance, with Indian products gaining respect globally and startups exceeding 90,000.

She proudly noted India's production of over 2 lakh PPE kits per day during the COVID-19 crisis and reiterated the goal of achieving a 5 trillion-dollar economy. She emphasized the significance of the National Education Policy (NEP) 2020 and encouraged resource conservation and entrepreneurship. She concluded by stressing individual transformation as the key to national progress.

The event featured prominent guest speakers including Anmol Sovit, Chair-Y20 India, Ramanatha Kumaragurubara Swamigal from Siravai Adheenam Kaumaramadalayam, Preethaa Ganesh, Vice President of Vels Group of Institutions in India, Singapore, & the United Kingdom, Kirthika Shivkumar, Executive Director of The Indian Public School and CK Hospital, and Nainar Balaji, a Social Worker.

One of the highlights of the event was the panel discussion on the topic of "Youth Leadership for 2047 - Shaping the Youth of Bharath," which featured insights from five distinguished panellists.

# Indirectly your data is stored!

***- Suresh A. Shan,*** *Chairman of CSI Mumbai Chapter*

✍ The Covai Mail

The Department of Computer Science at Dr. G.R. Damodaran College of Science organized a one-day National Symposium on 'AI Applications in the Transportation Industry' at IT Block on 21st September 2023. The event was graced by D.Padmanaban, the Correspondent of the college, and featured distinguished guests including Suresh A. Shan, Chairman of CSI Mumbai Chapter, and a Consultant in BFSI, NBFC, Tech - Audits, NEP, NAC, Education Incubation Centre, and CDBDC - Chief Digital Business Development Officer at TRCIMPEX and Senthil Kumar, an Associate Professor from the School of Computing at Amirta Vishwa Vidyapeetham.

Suresh A. Shan stressed the importance of authentic information in IT development and the significance of staying updated with IT laws. He highlighted the two different origins of ideas in AI development: individuals in startups who innovate and those in larger companies who align with company goals.

He emphasized that AI is not just about capturing information but also about how you analyze and extract information, especially in India with its diverse population and practices. He noted the impact of AI on mobile devices and mobile phones, mentioning that data from mobile devices, tracked through GPS positioning, can be used for various purposes, including augmented reality. Meanwhile, the data of mobile phone users is collected indirectly.

Senthil Kumar provided an introduction to AI, machine learning, and deep learning, discussing their features, neural networks, and classification. He covered topics such as underfitting, overfitting, parameters, hyperparameters, and the umbrella of AI, machine learning, and deep learning. He also discussed advances in deep learning, image classification, style transfer, data science, and their ongoing projects.

The symposium concluded with a Q&A session, where students asked questions and clarified doubts, followed by certificate distribution for participants.



***D.Padmanaban,*** *Correspondent*

The event witnessed students from a total of 14 colleges participating. Overall, the Symposium was a successful and informative event that highlighted the transformative potential of AI in the transportation industry.



*Suresh A. Shan, Chairman of CSI Mumbai Chapter*
*Senthil Kumar, Associate Professor, Amirta Vishwa Vidyapeetham*

## BU Chess Tournament Unveils Winners

✍ The Covai Mail

Hindusthan College of Arts & Science, in collaboration with the Coimbatore Chess Association, recently hosted the Bharathiar University Intercollegiate Chess Tournament from September 14 to 16, 2023. This prestigious event, held at Hicas auditorium, saw an impressive turnout of 93 colleges, making it a significant chess competition in the region.

The tournament featured both team and individual championships, with the top six individual winners earning the privilege to represent their colleges at the India Inter-university chess championship. The esteemed event welcomed Ragukumar, the District Sports and Youth Welfare Officer of Coimbatore, as the Chief Guest. Additionally, the presence of Ponnusamy, the college Principal, Karunanidhi, the Physical Director, and Jeeva, the Assistant Physical Director, added to the event's prestige.

In the Men's section, PSG College of Arts And Science secured the 1st place, followed by VLB Jaanakiyammal College of Arts and Science in 2nd place and Sri Saraswathi Thyagaraja College, Pollachi, in 3rd place. Gobi Arts and Science College, Gobi, claimed the 4th position.

For the Women's section, PSG College of Arts and Science emerged victorious in 1st place, with Gobi Arts and Science College, Gobi, in 2nd place, PSGR Krishnammaal College in 3rd place, and Government Arts College, Coimbatore, securing the 4th spot. The tournament showcased remarkable chess talent and celebrated the spirit of competition among these colleges.

## KMCH CON holds Mental Health Seminar

✍ The Covai Mail

KMCH College of Nursing's Department of Mental Health Nursing hosted a seminar on "Positive Mental Health & Well-Being" for third-year B.Sc (N) students (Batch 95) and second-year B.Sc(N) students (Batch 96) on September 13, 2023, in the Multipurpose Hall. The program commenced with a warm welcome from Prof. Buveneswari.

Prof. Madhavi, Principal of KMCH College of Nursing, emphasized the importance of Positive Mental Health & Suicide Prevention in her presidential address. The first session, led by Dr. Nivedhitha Selvakumar, a Consultant in Child & Adolescent Psychiatry at KMCH Hospital, centered on the 2023 Suicide Prevention Day Theme, "Creating Hope Through Action," addressing prevalence, causes, and action plans for suicidal behavior.

Mangaleswari Manjari, Assistant Professor at KMCH College of Physiotherapy, conducted the second session on "Positive Mental Health & Well-Being." Prof. Jamunarani gave the vote of thanks.

To Advertise in
THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL
**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

# PSG's Free Health Camp for the Todas

✍ The Covai Mail

PSG Hospitals Coimbatore organized an exclusive Health Screening Camp for the Toda Tribal Community in the Nilgiris, South India. This initiative took place at the Regional Centre for Tribal Culture - Convention Hall, Garden Road, Ooty, with the support of Pontosh, the Nilgiris district panchayat chairman.

The camp aimed to detect potential illnesses at an early stage and raise awareness about the importance of regular check-ups as part of the Kalaignar Centenary Celebrations. Mantesh Kuttan, President of the Toda Community Welfare Association, welcomed the medical team, and Maharajan, Revenue Divisional Officer, Ooty, inaugurated the camp.

G. Rangasamy, Former Managing Trustee and L.Gopalakrishnan, Managing Trustee of PSG & Sons' Charities recognized the healthcare needs of the tribal community. They ensured the participation of PSG Hospitals' Speciality Departments and provided specialized equipment like Echocardiograms and spirometry to detect heart and lung conditions.

Around 320 Toda tribals from different parts of Nilgiris benefited from the camp. A team of 30 personnel, including Consultants, Doctors, Nursing staff, and Technicians, conducted screenings and evaluations.



*Maharajan, Revenue Divisional Officer, Ooty, inagurated the PSG's free health camp for Toda Tribal Community at Nilgiris.*

Participants with pre-existing conditions such as Hypertension, Diabetes, Chest infections, Anemia, Cataracts, Cancer, Arthritis, and wheezing received assessments to determine if further treatment was necessary. Those requiring additional care will receive treatment at PSG Hospitals Peelamedu at a subsidized cost.

In addition to health screenings, the camp featured sessions to educate the Todas on the 6 Pillars of Wellness, including good nutrition, regular exercise, substance avoidance, adequate sleep, stress management, and harmonious social relationships.

Alwas, Secretary of Nilgiris Adivasi Welfare Association (NAWA), advocated for continued healthcare services by PSG Hospitals in various specialties for the welfare of Nilgiris' tribal population. Sathyaraj, Secretary of Todas Welfare Association, expressed gratitude to PSG Hospitals' management and team members for their dedicated service.

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan

# மனித வாழ்விற்கு அடித்தளமாக இருப்பவர்கள் ஆசிரியர்களே !

## - டாக்டர் தவமணிதேவி பழனிசாமி



டாக்டர் என்.ஜி.பி. ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளைத் தலைவர் நல்ல ஜி பழனிசாமி, டாக்டர் என்.ஜி.பி. கல்வியியல் கல்லூரி முதல்வர் இராமசாமி ஆகியோர் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தனர். உடன், நிர்வாக அறங்காவலர் தவமணிதேவி.

✍ தி கோவை மெயில்

டாக்டர் என்.ஜி.பி. கல்வியியல் கல்லூரியில் 19வது பி.எட்., பட்டப்படிப்பின் கல்வியாண்டு தொடக்க விழா நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் இராமசாமி வரவேற்றார். முதன்மை செயல் அலுவலர் புவனேஸ்வரன் வாழ்த்தினார். தலைமை உரையாற்றிய நல்லா ஜி பழனிசாமி, ”நாட்டை ஒன்றுபடுத்தும் ஆசிரியர்களே நம் நாட்டிற்கு தேவை. நாட்டின் வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு இன்றியமையாதது. ஆசிரியர் பணியைப் போன்று உலகத்தில் சிறந்த பணி எதுவுமில்லை. இதனைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்கள், மாணவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும்” என்றார்.

தொடர்ந்து தவமணிதேவி பழனிசாமி பேசுகையில், ”மனித வாழ்விற்கு அடித்தளமாக இருப்பவர்கள் ஆசிரியர்களே. அவர்களின் ஒழுக்கமே மாணவர்களின் ஒழுக்கத்திற்கு வித்திடும். ஒழுக்கத்துடனான கல்வியை மாணவர்களுக்கு கற்பிப்பது ஆசிரியர்களின் கடமை. நவீன வளர்ச்சிக்குத் தகுந்தவாறு கணிப்பொறி அறிவு, தகவல்தொடர்பு அறிவோடு திறன்மிக்கவர்களாக ஆசிரியர்கள் இருப்பது அவசியம். அதோடு சிறந்த ஆளுமையும், பல்துறை அறிவும் உடையவராக விளங்க வேண்டும்” என்றார்.

டாக்டர் என்.ஜி.பி. ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் மருத்துவர் அருண் பழனிசாமி, தொழில் மேம்பாட்டு நிறுவன இயக்குநர் மதுரா பழனிசாமி, முதன்மை செயல்நிலை அலுவலர் நடேசன், அறக்கட்டளையின் பிற கல்லூரி முதல்வர்கள், பெற்றோர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். உதவிப்பேராசிரியர் கலைச்செல்வன் நன்றி கூறினார்.

# 5 பேருக்கு மறுவாழ்வு அளித்த 41 வயது தொழிலதிபர்

✍ தி கோவை மெயில்

ஜிஜான் வயது 41. இவர் ஆர்.எஸ்.புரம், காமராஜபுரத்தில் அவரது மனைவி டின்னி ஜிஜான் மற்றும் அவரது தந்தை ஜான் அவர்களுடன் வசித்துவந்தார்.

இவர் கடந்த 19.9.2023 ஆம் தேதி காலை 6.00 மணி அளவில் இரண்டு சக்கர வாகனத்தில் சாலையில் சென்று கொண்டிருக்கும்போது கிராஸ்கட் ரோடு, காந்திபுரம் அருகில் எதிர்பாராதவிதமாக விபத்து ஏற்பட்டு பலத்த காயம் அடைந்தார். உடனடியாக அவர் அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் மேல்சிகிச்சைக்காக, அவிநாசி சாலையில் உள்ள கே.எம்.சி.ஹெச். மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. இருந்தபோதிலும் அவரது உடல் நிலையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்நிலையில் கடந்த 20.9.2023 ஆம் தேதியன்று அவர் மூளைச்சாவு அடைந்தார். அதனைத் தொடர்ந்து அவரது மனைவி மற்றும் அவரது தந்தை ஆகியோர் ஜிஜான் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்தனர். தமிழ்நாடு உறுப்பு தான ஆணையத்தின் அனுமதியுடன் அவரது இருதயம், சிறுநீரகங்கள், கண்கள் ஆகியவை தானமாகப் பெறப்பட்டன. ஒரு சிறுநீரகம் கே.எம்.சி.ஹெச். மருத்துவமனைக்கும், இருதயம், ஒரு சிறுநீரகம், கண்கள், கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டன. கே.எம்.சி.ஹெச். உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்கள் உறுப்புகளை மற்ற நோயாளிகளுக்கு பொருத்துவதற்கு தகுந்த நேரத்தில் மிகவும் திறம்பட செயல்பட்டு உறுப்புகளை அனுப்பிவைத்தனர்.

இதுகுறித்து கே.எம்.சி.ஹெச். மருத்துவமனைத் தலைவர் டாக்டர் நல்ல ஜி பழனிசாமி கூறுகையில், ‘மக்களிடையே உடல் உறுப்பு தானம் குறித்து அதிக விழிப்புணர்வு தேவைப்படுகிறது. ஒருவர் இறந்த பிறகு அவரது உடல் உறுப்புகள் தானமாக வழங்கப்பட்டால், அது பலரது உயிரைக் காப்பாற்ற உதவும். உடல் உறுப்பு தானம் வழங்கிய ஜிஜான் குடும்பத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்’ என்றார்.





